Erziehungsdepartement des Kantons Basel-Stadt

BASEL LANDSCHAFT

BILDUNGS-, KULTUR- UND SPORTDIREKTION
AMT FÜR VOLKSSCHULEN

***Flyer ‚Unterricht in der Herkunftssprache: Ein Gewinn!‘** Übersetzung Tamil*

# தாய்மொழியில் கற்பித்தல்: நன்மையே!

வீட்டில் டொச்மொழி தவிர்ந்த ஏனைய மொழிகள் பேசுகிறீர்களா? அப்படியானால் அது உங்கள் குழந்தைக்கான வெகுமதி. தங்களின் முதல் மொழியை தெளிவாகப் பேசும் குழந்தைகள் டொச்சையும் ஏனைய பிற மொழிகளையும் இலகுவாகக் கற்கிறார்கள். ஆதலால் உங்களின் குழந்தைக்கு தாய்மொழியில் கற்றலையும் கலாச்சாரத்தையும் கற்பதற்கு வழி சமைத்துக்கொடுங்கள் (HSK). பாசல்- நகர மற்றும் பாசல்- புறநகர மானிலங்களில் முப்பதுக்கும் மேற்பட்ட மொழிகள் கற்ப்பிப்பதற்கு ஏதுவாக உள்ளது.

---

யார் தமது முதல்மொழியை தெளிவாகக் கற்கிறார்களோ, அவர்கள் ஏனைய மொழிகளை விரைவாகக் கற்கிறார்கள். இதை அறிவியல் பரிசோதனைகள் தெளிவாகக் காட்டுகின்றன. இதையே ஆசிரிய ஆசிரியைகளும் நாளாந்தம் வகுப்பறைகளில் உணர்கிறார்கள். மேலும் தாய்மொழியில் கற்பதால் மேலும் பல நன்மைகள் உண்டு:

- உங்கள் குழந்தை அதே மொழியைப் பேசும் மற்றய குழந்தையுடன் பழகமுடிகிறது.
- அது மொழி வழியாக உறவினர்களுடனும் தெரிந்தவர்களுடனும் இலகுவாக தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறது.
- அது உங்களின் தாய் நாட்டுடன் தொடர்பு கொள்ள முடியும். ஆதலால் அது ஓர் நெருக்கத்தை உணர்கிறது.
- அது பல வகையான கலாச்சாரங்களையும் அதனது பெறுமதியையும் அறிந்து கொள்கிறது.
- அது தனது மொழியறிவில் பெருமை கொள்வதுடன் ஏனைய மொழிகளையும் கற்க விரும்புகிறது.
- நாளடைவில் அதற்கு தொழில் வேலைபார்ப்பில் நன்மைகள் உண்டு.

என்ன கற்பிக்கப்படுகிறது?
குழந்தைகளும் இளையோரும் மொழிக்கல்வியை விளங்கிக்கொள்ளல், உரையாடல், வாசித்தல் மற்றும் எழுதுதல் போன்றவற்றில் திறமாகக் கற்கிறார்கள். அவர்கள் அவர்களின் கலாச்சாரத்தை அனுபவிப்பதுடன் வரலாறு, புவியியல், அரசியல், உணவு, விழாக்கள் மற்றும் மதச்சடங்குகள் போன்றவற்றையும் கற்கிறார்கள். பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரிய ஆசிரியைகள் இவர்களுக்கு அதீத மகிழ்ச்சியுடன் கற்பிக்கிறார்கள்.
எந்த வகையில் எங்கே கற்பிக்கப்படுகிறது?
இக் கற்பித்தல் வாரத்துக்கு ஒரு தடவை பொதுப்பாடசாலைகளில் நடைபெறும். சாத்தியமானால் உங்கள் குழந்தை படிக்கும் பாடசாலையிலேயோ அல்லது அதற்கு அண்மையிலேயோ இடம் பெறும். இத் திட்டத்துக்கு அவரவர் நாட்டுத் தூதரகங்கள் அல்லது தனிப்பட்ட பெற்றோர் அமைப்புகள் நிதியுதவி வழங்குகின்றார்கள். பெற்றோர் ஆகிய நீங்கள் ஒரு சிறுதொகையை வழங்க வேண்டியிருக்கும்.
வீட.டில் நீங்கள் உங்கள் குழந்தையை எந்த வழியில் ஊக்குவிக்கலாம்?

- நீங்கள் எந்த மொழியில் சிந்திக்கிறீர்களோ அல்லது கனவுகாண்கிறீர்களோ அம்மொழியிலேயே குழந்தையுடன் உரையாடுங்கள். குழந்தை டொச்மொழியில் பதிலளித்தாலும் கூட நீங்கள் உங்கள் மொழியிலேயே பேசுங்கள்.
- அவர்களுக்கு தாய்மொழி ஆவலைத் தூண்டுங்கள். கதைகளை கூறுங்கள், அவர்கள் கூறுவதை கேளுங்கள், அவர்களுடன் சேர்ந்து பாடுங்கள்.
- தாய் மொழியில் உள்ள புத்தகங்களையும், பாடல்கள், கதைகள் மற்றும் திரைப்படங்கள் அடங்கிய இசைத்தகடுகளையும் (CD) கொடுங்கள்.
- டொச் அல்லது வேற்றுமொழி பேசும் குழந்தைகளுடனான தொடர்பை ஊக்குவியுங்கள்.
- பாடசாலை மற்றும் HSK ஆசிரிய ஆசிரியைகள் உடனான தொடர்பை பேணுங்கள்.

---

**HSK** கற்பித்தலுக்கான விண்ணப்பம்
தயவசெய்து தங்கள் குழந்தையை நேரடியாக அதனது வகுப்பாசிரியரிடமே பதிவுசெய்யுங்கள். 4000 க்கும் மேலான குழந்தைகள் ஏற்கனவே பாசல்- நகர மற்றும் பாசல்- புறநகர பாடசாலைகளில் HSK முறையில் கல்வி கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

---

## Kantonale Kontaktadressen

Daniel Aeschbach
Erziehungsdepartement Basel-Stadt | Volksschulen
Fachstelle Pädagogische Unterstützung
Kohlenberg 27 | Postfach | 4001 Basel
Tel. +41 (0)61 267 90 08 | daniel.aeschbach@bs.ch
www.bs.ch/hsk

Bildungs-, Kultur- und Sportdirektion Kanton Basel-Landschaft
Amt für Volksschulen
Sekretariat
Munzachstrasse 25c, Postfach 616, 4410 Liestal
Tel. +41 (0)61 552 50 98, avs@bl.ch
www.hsk.bl.ch